# காலை முரசு

பக்கங்கள் - 30

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 29 வியாழக்கிழமை 12.02.2026 | அதிர்வு 196


## தோல்விப் பயத்தில் தேர்தல் இழுத்தடிப்பு

### அரசைச் சாடும் எதிரணி



"கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் தேசிய மக்கள் சக்தி அரசு, மாகாண சபைத்

05



# மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## ஐரோப்பியத் தூதுக்குழுவிடம் தமிழரசுக் கட்சி கோரிக்கை

கொழும்பு, பெப். 12

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டத் தூதுக்குழுவினர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியப் பிரமுகர்களை நேற்று கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் மற்றும் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

05

## இயற்கை வளங்கள் இருந்தும் வறுமையில் முதலிடமா? முல்லைத்தீவை மீட்டெடுக்க அநுர அரசு அதிரடி திட்டம்

"வளம் நிறைந்தும் வறுமையில் முதலிடம் வகிக்கும் முல்லைத்தீவு மாவட்டம், இந்த அரசின் காலத்தில் அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நிச்சயமாக மிகப் பெரிய அபிவிருத்தியை அடையும். அதற்கான அடிப்படைத் திட்டங்கள் மற்றும் கட்டுமானங்கள் இப்போதே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன."

06






தூங்குபவர்களை எழுப்பலாம். தூங்குபவர்கள் போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது என்பர்.

இனவாதம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவும் தூங்குபவர் போல கதை விடுகிறார்.

பௌத்த மதத்துக்காக - பௌத்த தம்மத்துக்காக - பௌத்த சாசனத்திற்காக - மகா சங்கத்திற்காக - பேசுவது இனவாதம் அல்ல என்று அவர் தத்துவம் உரைக்கிறார்.

அவர் சொல்வது சரிதான். பௌத்தத்துக்காகப் பேசுவது இனவாதம் அல்ல. ஆனால் பௌத்தத்தை ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக முன்னெடுப்பது இனவாதம்தான்.

சிங்கள - பௌத்தர்களை எண்ணிக்கையில் பெரும்பான்மையாகக் கொண்டு, அந்தப் பெரும்பான்மை அட்சர கணித எண்ணிக்கையை, மற்றைய இனங்களை அடக்கி, ஒடுக்கி, ஒழித்து, பௌத்த மேலாதிக்கத்தை விஸ்தரிப்

05



# தேயிலை மலையில் மக்களுடன் ஜனாதிபதி

## சம்பள உயர்வு மகிழ்ச்சியில் திளைத்த தொழிலாளர்கள்

(பி.கேதீஸ்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மலையகப் பெருந்தோட்டப் பகுதிக்குச் சென்று, தொழிலாளர்களுடன் கலந்துரையாடும் புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களை ஆக்கிரமித்துள்ளன.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான சம்பளம் 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

தமக்குரிய சம்பள உயர்வு நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்றதால் தொழிலாளர்கள் மகிழ்ச்சியில் இருந்தனர். இந்நிலையிலேயே அவர்களை ஜனாதிபதி நேற்று நேரில் சந்தித்தார்.

“முழு நாடுமே ஒன்றாக” தேசிய செயற்றிட்டத்தின் மத்திய மாகாண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று நுவரெலியா சென்றார்.

அங்கு செல்லும் வழியிலேயே தொழிலாளர்களைச் சந்தித்து, சிநேகர்பூர்வமாகக் கலந்துரையாடினார்.

தமக்குச் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்த ஜனாதிபதிக்கு மக்கள் நன்றி தெரிவித்தனர். தோட்டத் தொழிலாளர்களை, தேயிலை மலைக்கே சென்று ஜனாதிபதி சந்தித்தமையைப் பலரும் சமூகவலைத்தளங்களில் கொண்டாடி வருகின்றனர்.













# குற்றவாளிகளிடம் அதிகாரம் இருக்கவே முடியாது; 2026 ஆம் ஆண்டு சட்டத்தின் ஆட்சிக்கான ஆண்டு!

## வங்குரோத்துக்குப் போர் காரணமல்ல ஊழலும் மோசடியுமே காரணம் என்று நுவரெலியாவில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(பி.கேதீஸ்)

"சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்த எந்தவொரு நாடும் அபிவிருத்தி அடைந்ததில்லை. அத்தகைய நாடுகளில் குற்றவாளிகளே அதிகாரத்தைக் கையில் வைத்துள்ளனர். எனவே, 2026 ஆம் ஆண்டை இலங்கையில் "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்பதை உயிர்ப்பிக்கும் ஆண்டாக மாற்றுவோம்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் நுவரெலியாவில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்புக்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டின் மத்திய மாகாண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

**சட்டத்தின் ஆட்சியும் பொருளாதாரமும்**

நாட்டின் பொருளாதாரப் பின்னடைவு குறித்து உரையாற்றிய ஜனாதிபதி,

"யுத்தத்தால் தான் நாடு வீழ்ச்சியடைந்ததாகக் கூறப்பட்ட போதிலும், யுத்தம் முடிந்து 13 ஆண்டுகளின் பின்னரே நாடு வங்குரோத்து அடைந்தது. இதற்கு முறையற்ற பொருளாதாரக் கொள்கைகளும், ஊழல் மற்றும் மோசடிகளுமே உண்மையான காரணங்களாகும். எந்தவொரு நெருக்கடியையும் தாங்கக்கூடிய பலமான பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்பி வருகின்றோம்." – என்றார்.

சமீபத்திய டித்வா சூறாவளி அனர்த்தத்தின் போது, 1.2 டிரில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்ட போதிலும், வெளிநாட்டுக் கடன் பெறாமலும், பணம் அச்சிடாமலும் திறைசேரியில் இருந்த 50 ஆயிரம் கோடி ரூபாவைக் கொண்டு நிலைமையைச் சமாளித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**போதைப்பொருள் எனும் தேசிய அச்சுறுத்தல்**

போதைப்பொருள் வர்த்தகம் நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பைச் சீர்குலைப்பதாக எச்சரித்த ஜனாதிபதி, பின்வரும் முக்கிய விடயங்களை வலியுறுத்தினார்.

**அரசியல் தலையீடு**

போதைப்பொருள் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டு வந்த அரசியல் பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

**சமூகப் பாதிப்பு**

போதைப்பொருள் சந்தையைப் பகிர்ந்து கொள்ளும் மோதல்களே நாட்டில் அண்மைக்கால துப்பாக்கிச்சூடுகளுக்குக் காரணமாகின்றன.

**நிர்வாகச் சீர்குலைவு**

போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்படும் கறுப்புப் பணம், அரச அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் விலைக்கு வாங்கப் பயன்படுத்தப்படுகின்றது. இதனை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும்.

**அரச சேவை மற்றும் சம்பள உயர்வு**

அரச சேவையை வலுப்படுத்துவதன் அவசியத்தைக் குறிப்பிட்ட அவர், 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்காகத் தலா 11 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், 2027 இல் அதன் மூன்றாம் கட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் உறுதியளித்தார்.

மேலும், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் கொடுப்பனவுப் பிரச்சினைகள் குறித்தும் அரசு கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

**ஒருமித்த செயற்பாட்டுக்கு ஜனாதிபதி அழைப்பு**

"எமது பிள்ளைகள் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்குப் பலியாகாத ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டியது நம் அனைவரினதும் பொறுப்பு. இதில் மதத் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சட்டத்தை நிலைநாட்ட பொலிஸாருக்கும் இராணுவத்திற்கும் முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது." – என்றும் ஜனாதிபதி தனது உரையில் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வின் போது, போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயற்பட்ட நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த 62 பொலிஸ் அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.















### ஆவரங்கால் – தொண்டைமானாறு வீதி ரூ. 680 மில்லியனில் புனரமைப்பு:

# அரசியல் இலாபத்துக்காக அல்ல; மக்களுக்காகவே வீதி அபிவிருத்தி

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

“கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் தமது சொந்தத் தேவைகளுக்கும், அரசியல் இலாபங்களுக்காகவுமே வீதிகளை அபிவிருத்தி செய்தனர். ஆனால், தற்போதைய அரசே மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து வீதிகள், பாலங்கள் மற்றும் இறங்குதுறைகளை அபிவிருத்தி செய்து வருகின்றது. நான் யாழ். மாவட்ட செயலராகக் கடமையாற்றிய காலத்தில் எவையெல்லாம் சாத்தியமற்ற கனவுகளாக இருந்தனவோ, அவை இன்று இக் காலப்பகுதியில் நனவாகி வருகின்றன.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் வீதிக் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் பொதுமக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்திச் செயற்படுத்தப்படும் ‘மறுமலர்ச்சிக்கான பாதை’ திட்டத்தின் கீழ், ‘ஆவரங்கால் – தொண்டைமானாறு வீதி’ மேம்படுத்தல் மற்றும் நிர்மாணப் பணிகளின் ஆரம்ப நிகழ்வு, நேற்று புதன்கிழமை காலை அச்சுவேலி மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரி நீங்கலாக சுமார் 680 மில்லியன் ரூபா மதிப்பீட்டில், 6.03 கிலோ மீற்றர் நீளத்துக்கு இவ்வீதி முழுமையாகப் புனரமைக்கப்படவுள்ளது. துரித கதியில் முன்னெடுக்கப்படவுள்ள இவ்வீதிப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, 12.05.2027 அன்று மக்கள் பாவனைக்காக மீளக் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில்,

“இன்று இப்பகுதி மக்களுக்கு மிக மகிழ்ச்சிக்குரிய நாள். ஆவரங்கால் – தொண்டைமானாறு வீதியைத் திருத்த வேண்டும் எனப் பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், நீண்ட காலமாக அது சாத்தியப்படாமலே இருந்தது. அந்தக் கனவு இப்போதைய அரசாங்கத்தின் காலத்தில் நடைமுறைக்கு வருகின்றது.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க வடக்கு மக்கள் மீது விசேட கரிசனையுடையவர். அவர் கடந்த காலத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதே, எமது மக்களின் துயரங்களை அறிந்தவர். நான் யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய அக்காலப்பகுதியில், அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினருக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மக்களுக்கும் நிதி ஒதுக்கியிருந்தார். அந்தளவு தூரம் எமது மக்கள் தொடர்பில் அக்கறை கொண்டவர்.

எனவே, அவர் நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராக உள்ள இக்காலத்தில், எமது மாகாணத்தின் அபிவிருத்திகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். இவ்வாய்ப்பை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.” – என்றார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சமய வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, வீதிப் புனரமைப்புக்கான பெயர்ப் பலகையை அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்து, நிர்மாணப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.றஜீவன், கௌரவ எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் குரூஸ், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.













# இலங்கையில் சிறுவர் புற்றுநோய் அதிகரிப்பு; இலவச மருந்துகள் வழங்குவதற்கு ஒப்பந்தம்

இலங்கையில் ஓராண்டு காலப் பகுதிக்குள் மொத்தம் 900 சிறுவர் புற்றுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமூக மருத்துவ நிபுணர் வைத்தியர் சூரஜ் பெரேரா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், சிறுவர் புற்றுநோய்க்கான சிகிச்சைக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய மருந்துகளையும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குத் தடையின்றி வழங்குவதற்காக சுகாதார அமைச்சருடன் ஒரு முக்கிய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது, சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சைகளைப் பெறவும், சிகிச்சையின் முடிவுகளைச் சாதகமாக மாற்றவும் மிக முக்கியமான காரணியாக அமைகிறது என்று சுட்டிக்காட்டினார்.

பிள்ளைகளிடம் தொடர்ச்சியான அல்லது வழக்கத்திற்கு மாறான அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டுமெனவும் காலதாமதம் இன்றி சிகிச்சையைத் தொடங்குவது குழந்தைகளின் உயிரைக் காக்க உதவும் எனவும் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கு அந்த மதத்தையும் அது சார்ந்த மொழியையும் பயன்படுத்துவது இனவாதம்தான். அதுவே பேரினவாதம்.

தங்கள் மதத்தையும் தங்கள் இனத்தையும் பாதுகாப்பது இனவாதம் அல்ல. ஆனால் மற்ற மதங்களை அடக்கி, அவற்றின் மீது தங்கள் மதத்தை நிலை நிறுத்த முயல்வது நிச்சயமாக இனவாதமே.

பௌத்தத்தையும் புத்தரையும் தமிழர்கள் விரோதத் தரப்புகளாகப் பார்க்கவில்லை. ஆனால் தமிழர் தேசத்தை - அவர்களின் இனத்தை - அவர்களின் மொழியை - அடக்குவதற்கான அடையாளமாக பௌத்தத்தையும், புத்தர சிலையையும் பயன்படுத்துவதைத் தமிழர்கள் வெறுக்கின்றார்கள். புத்தர் சிலையை தங்கள் வணக்கத்துக்காக ஒரு தரப்பினர் நிறுவுவதை யாரும் இனவாதமாகப் பார்க்க மாட்டார்கள். ஆனால் தமிழர் தேசத்தில் தங்களின் மேலாதிக்கத்தின் அடையாளமாக - குறியீடாக / புத்தரை நிலை நிறுத்துவதைத்தான் தமிழர்கள் எதிர்க்கிறார்கள்.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் - பௌத்தர்களே இல்லாத இடங்களில் - தங்களின் மேலாதிக்க சின்னமாக புத்தர் சிலைகளை நிலை நிறுத்துவதைத் தமிழர்கள் தங்கள் மீதான அடக்கு முறையாக நோக்குகிறார்கள். இதை நாமல் ராஜபக்ஷ புரிந்து கொள்ள வேண்டும்.

கௌதம புத்தர் இந்துவாகத்தான் பிறந்தார். அவரை இந்துவின் ஒரு பிரிவாகத்தான் இந்தியாவிலும் நோக்குகின்றார்கள். பிற இடங்களில் நோக்குகின்றார்கள். அவரை வெறுக்க வேண்டிய காரணம் எதுவும் தமிழர்களுக்கு இல்லை. ஆனால் தமிழர் தேசத்தை அடக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் அடையாளமாக புத்தரும் அவரது மத மேலாதிக்கமும் அமைவதைத் தான் தமிழர்கள் சகித்துக் கொள்ள விரும்புகிறார்கள் இல்லை.

இது நாமல் ராஜபக்ஷவுக்கும் நன்கு தெரியும். தெரிந்திருந்தும் தெரியாதவர் போல நடிக்கிறார் அவர். அவரது இப்போதைய கருத்து வெளிப்பாட்டின் பின்புலம் அதுதான்.

புத்தரை தெய்வமாக மதிப்பவர்களாகக் காட்டிக்கொண்டுதான் - அவரது பஞ்சசீலத்தைப் போற்றுபவர்களாக தங்களை வெளிப்படுத்திக் கொண்டுதான் - தமிழர் தேசத்தின் மீது பெரும் பாதகத்தை கட்டவிழ்த்து விட்டது ராஜபக்ஷ ஆட்சி என்பது மறக்க கூடியது அல்ல.

மீளாத் துயில் கொண்டு மண்ணுக்குள் உறங்கிய பல்லாயிரம் போராளிகளை, அவர்களது துயிலும் இல்லங்களை புல்டோஸர் கொண்டு அழித்துப் புரட்டி, மிருகத்தனம் புரிந்த காட்டுமிராண்டி ஆட்சியின் பிரதிநிதி தான் நாமல் ராஜபக்ஷ. அவரே பௌத்தம் பற்றியும், பௌத்த சீலம் பற்றியும், புத்த பெருமான் பற்றியும் பேசுவதற்கான அடிப்படைத் தகுதி உடையவர்களா தாங்கள் என்பதை ஒருதரம் தங்களுக்குள் அவர்களே தீர்மானித்துக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சாணக்கியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது பின்வரும் விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது என்று எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

### பயங்கரவாதத் தடைச் சட்டம்

தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் அது தொடர்பான புதிய சட்ட வரைவுகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

### மாகாண சபைத் தேர்தல்

நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்துவதன் அவசியம் குறித்துத் தூதுக் குழுவினருக்கு விளக்கப்பட்டது.

### சர்வதேச அழுத்தம்

இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும், மாகாண சபைத் தேர்தலை உரிய முறையில் நடத்தவும் இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் போதிய அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சி தரப்பில் இதன் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

இலங்கையின் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து வரும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழு, தமிழரசுக் கட்சியினருடன் நடத்திய இந்தச் சந்திப்பு அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

## தோல்விப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை நடத்தினால் படுதோல்வியடைவது உறுதி. அந்த அச்சத்தினாலேயே தேர்தலை நடத்தாமல் அரசு இழுத்தடிப்பு செய்கின்றது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "இந்த அரசு குறுகிய காலத்திலேயே மக்களின் நன்மதிப்பை இழந்து வருகின்றது. இதற்கு அண்மையில் நடைபெற்ற கூட்டுறவு சங்கத் தேர்தல்களே சிறந்த உதாரணம்.

குறிப்பாக, குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற அனைத்துக் கூட்டுறவு சங்கத் தேர்தல்களிலும் அரசு தோல்வியடைந்துள்ளது. நாடு முழுவதும் இதே நிலைமைதான் நீடிக்கின்றது.

தேர்தலுக்குப் பயமில்லை என்று மேடைகளில் கூறினாலும், மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசுக்குத் துணிவு இல்லை." – என்றார்.

அரசின் வாக்குறுதிகள் குறித்துக் கேள்வி எழுப்பிய அவர், "புதிய அரசமைப்பை உருவாக்குவதாகக் கர்தினால் ஆண்டகைக்கு ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி என்னவானது? அதேபோல், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைத் தாம் ஆட்சிக்கு வந்ததும் வெளிப்படுத்துவோம் என்று கூறினார்கள். தற்போது இவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இரண்டாவது ஏப்ரல் மாதம் (உயிர்த்த ஞாயிறு நினைவு தினம்) நெருங்குகின்றது. ஆனால், இதுவரை பிரதான சூத்திரதாரி யார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. கர்தினால் ஆண்டகையை இந்த அரசு ஏமாற்றிவிட்டது." – என்றும் குற்றம் சாட்டினார்.

"நாட்டை முன்னோக்கிச் செல்வதற்கான எந்தவொரு திட்டமும் இந்த அரசிடம் இல்லை. கடந்த ஒரு வருடத்தில் எவ்வித அபிவிருத்தியோ அல்லது மாற்றமோ நிகழவில்லை. மாறாக, நாடாளுமன்றத்திலும் ஏனைய இடங்களிலும் நாடகங்களை அரங்கேற்றுவதிலேயே அரசு குறியாக உள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலும் உயிர்த்த ஞாயிறு விவகாரத்தை வைத்துப் புதிய நாடகத்தை அரங்கேற்றாமல், உண்மையான சூத்திரதாரியைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்." – என்றும் நளின் பண்டார எம்.பி. வலியுறுத்தினார்.



## இயற்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பங்கேற்புடன், முல்லைத்தீவு மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளுநர் தனது உரையில்,

“வடக்கு மாகாணத்தில் மிகப் பெரிய நிலப்பரப்பையும், இயற்கை வளங்களையும் கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு விளங்குகின்றது. இருப்பினும், வறுமைச் சுட்டியில் இது முதலிடத்தில் இருப்பது வேதனையானது. பின்தங்கிய நிலையிலுள்ள இம்மாவட்டத்தை மீட்டெடுக்கும் பணிகள் தற்போதைய அரசின் காலத்தில் துரிதப்படுத்தப்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் வடக்கு மக்கள் மீது கொண்டுள்ள விசேட கரிசனையை, நாம் எமது மாகாணத்தின் வளர்ச்சிக்காகச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.” – என்று வலியுறுத்தினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

“கொக்கிளாய் – புல்மோட்டை பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பான சாத்தியவள ஆய்வு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாய்வு அறிக்கையை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்தால், பாலத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதியை அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய முடியும். இத்திட்டத்தில் ஜனாதிபதி மிகுந்த அக்கறையுடன் உள்ளார்.”– என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் வரவேற்புரையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட செயலர், முல்லைத்தீவு மக்களின் நீண்டகாலக் கனவாக இருந்த வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, முல்லைத்தீவிலிருந்து கொழும்புக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் வசதி இல்லாமலிருந்த குறையும் தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும், கடந்த “டித்வா“ பேரிடரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்கள் ஆகியனவற்றைப் புனரமைப்பதற்கான கோரிக்கையும் இதன்போது முன்வைக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான க.திலகநாதன், து.ரவிகரன், காதர் மஸ்தான், வடக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சின் மேலதிக செயலாளர்கள், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் கௌரவ தவிசாளர்கள் எனப் பலரும்





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நிர்வாக சேவை சீரழிப்பு

தற்போதைய அரசாங்கம் தகுதி மற்றும் அனுபவம் இல்லாத தமது கட்சியின் ஆதரவாளர்களை சிவில், நிர்வாகப் பதவிகளுக்கு நியமித்து, நாட்டில் எஞ்சியிருக்கும் அரச சேவையையும் அழித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசுகளின் காலத்தில் ஊழலும் முறைகேடுகளும் நிர்வாகச் சீர்கேடுகளும் தாராளமாக இருந்தன என்று குற்றம் சாட்டி, அதன் மீது தனது அரசியல் செல்வாக்கைக் கட்டி எழுப்பி, அதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கும் தேசிய மக்கள் சக்தி, இப்போது அரச நிர்வாக சேவையைத் தன் பங்குக்குச் சீர்குலைத்து வருவதாகக் குற்றச்சாட்டப்படுகிறது.

இந்த அரசின் காலத்தில் ஊழல், முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்திருக்கின்றன என்று வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், அவற்றின் தார தம்மியம் இனிப் போகப் போகத்தான் வெளிப்படத் தொடங்கும். ஊழல், மோசடி, முறைகேடுகள் இல்லாவிட்டாலும், இருக்கின்ற அரச நிர்வாக முறைமை திறமையானதாகவும், வலுவானதாகவும், தகுதியானதாகவும் இல்லாவிடில் நாடு பொருளாதார ரீதியில் நிமிரவே முடியாது என்பதுதான் உண்மை.

இருந்தவை எல்லாம் தவறு என்று அவற்றை ஒதுக்கி விட்டு, புதியவை என்ற பெயரில் திறமையற்றவற்றைக் கொண்டு வந்து ஒன்றும் செய்ய முடியாது என்பதுதான் யதார்த்தம்.

அரச நிர்வாக சேவையை அரசியல் நோக்கத்தில் அணுகி இந்த அரசு குழப்பியடிக்கின்றதோ என்ற கருத்து நிலைப்பாடு - சந்தேகம் - இப்போது பல தரப்புகளிலும் இருந்து வெளிப்படத் தொடங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்திற்கான நிதியை அனுமதித்தமை தொடர்பான சம்பவத்தில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தனது பதிவில் விசேடமாகத் தெரிவித்துள்ளார்.

சமன் ஏக்கநாயக்கவை தமக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரியும் எனவும், அவர் மிகவும் நேர்மையான மற்றும் உயர்தர தொழில்முறை அரச அதிகாரி எனவும் சந்திரிக்கா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நீதி வழங்குவது என்ற விடயம் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு மட்டுமே என மட்டுப்படுத்தப்படுவது நாட்டின் ஆட்சி முறைக்கு பாரிய அச்சுறுத்தலாகும் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா சுட்டிக்காட்டியுள்ளார்.

“தொழில்முறை, திறமையான மற்றும் நேர்மையான அரச சேவைத் துறை இல்லாமல் ஓர் அரசாங்கம் முன்னோக்கிச் செல்ல முடியாது. அரசியல் தலைவர்களுக்கு நிர்வாக அனுபவம் இல்லாவிட்டாலும், அவர்களிடம் அசைக்க முடியாத நேர்மை இருக்க வேண்டும். அத்துடன் நாட்டை ஆளும்போது தொழில்முறை அதிகாரிகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். எமது உன்னத தேசத்தை மீண்டும் எப்படிக் கட்டியெழுப்புவது என்பதை ஜனநாயக ரீதியில் தீர்மானிக்க வேண்டும்” - எனத் தெரிவித்துள்ளார்.

உண்மைதான். திறமையான அரச நிர்வாக சேவையை இழக்கும் அரசு, தனது அதிகாரப் பிடியையே காலகதியில் இழப்பது தவிர்க்க முடியாததாகும்.





# கிளிநொச்சி வீதி அபிவிருத்திப் பணிகள் விரைவுபடுத்தல்: அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் விசேட கூட்டம்

கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள நான்கு வழிப்பாதையை மேலும் விஸ்தரிப்பது குறித்தும், வீதி விபத்துக்களைக் குறைக்கும் வகையில் வீதிச் சமிஞ்சை விளக்குகளைப் பொருத்துவது குறித்தும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பங்கேற்புடன் நேற்று புதன்கிழமை மாலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலர் சு. முரளிதரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:–

கிளிநொச்சி நகரப் பகுதியின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், மேம்படுத்தவும் 4 வழிப்பாதையைத் தேவையான இடங்களுக்கு விஸ்தரிப்பது தொடர்பிலும், பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்யப் பாலங்கள் மற்றும் வீதிச் சமிஞ்சை விளக்குகளை அமைப்பது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு உட்பட்ட வீதிகள், பாலங்கள் மற்றும் பிரதேச சபைகளுக்குச் சொந்தமான கிராமிய வீதிகளின் தற்போதைய நிலை குறித்தும், அவற்றை முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களில் நிலவும் தாமதங்கள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. இத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்குத் தடையாக உள்ள காரணிகள் குறித்தும், அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சின் மேலதிக செயலாளர்கள், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வீதி அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தித் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# வடக்கில் 2,726 மில்லியன் ரூபாவில் 1,363 புதிய வீடுகள்: ஆறு மாதங்களுக்குள் முடிக்குமாறு அமைச்சர் உத்தரவு

"வடக்கு மாகாணத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மீள்குடியேற்ற வீட்டுத் திட்டத்தின் கீழ், இந்த வருடம் 2 ஆயிரத்து 726 மில்லியன் ரூபா செலவில் 1,363 புதிய வீடுகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அடுத்த 6 மாதங்களுக்குள் இவ்வீட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்."

– இவ்வாறு வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள புதிய மீள்குடியேற்ற வீட்டுத் திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல், நேற்று புதன்கிழமை மாலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

வீடமைப்பு அமைச்சர் சுசில் ரணசிங்க, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 7 ஆயிரத்து 306 வீடுகள் தேவையுள்ள நிலையில், 2026ஆம் ஆண்டு முதற் கட்டமாக 1,363 வீடுகளை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டுக்கு தலா 2 மில்லியன் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய வீடுகளை அடுத்த 3 ஆண்டுகளுக்குள் நிர்மாணித்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில், 2019ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்டு, பாதியில் கைவிடப்பட்ட வீட்டுத் திட்டங்கள் குறித்தும் ஆளுநர் மற்றும் மாவட்ட செயலர்கள் அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி, அதற்கான விசேட தீர்வைப் பெற்றுத் தருவதாக அமைச்சர்கள் உறுதியளித்தனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மீள்குடியேற்ற வீட்டுத்திட்டத்துக்குரிய பயனாளிகள் பட்டியல் அடுத்த 2 அல்லது 3 வாரங்களுக்குள் இறுதி செய்யப்பட்டு, பகிரங்கமாகக் காட்சிப்படுத்தப்பட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. திட்டத்துக்கான மூலப் பொருட்கள் மற்றும் வேலையாட்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சவால்களைக் கருத்தில் கொண்டு, மிக இறுக்கமான கண்காணிப்புடன் 6 மாத காலப் பகுதிக்குள் வீடுகளைப் பூர்த்தி செய்யுமாறு அமைச்சர் சுசில் ரணசிங்க பணிப்புரை வழங்கினார்.

யாழ். மாவட்டத்தின் கடல் கடந்த தீவுகளில், குறிப்பாக நெடுந்தீவில் அமைக்கப்படும் வீடுகளுக்கு மூலப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு அதிகம் என்பதால், அது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா கோரிக்கை விடுத்தார். இக்கோரிக்கை தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடக்கின் 5 மாவட்ட செயலர்கள், மேலதிக மாவட்டச் செயலர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









# நாட்டின் சில பகுதிகளில் இன்று முதல் மழை பெய்யும்

கடந்த சில நாள்களாக நிலவி வந்த வரண்ட வானிலை நிலையில் மாற்றம் ஏற்பட்டு, இன்று முதல் நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது.வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமத்திய, மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம் பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ் வப்போது மழை பெய்யக்கூடும்.

மேலும் வட மாகாணத்தில் பல தடவை கள் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அத்துடன் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாறை, மட்டக் களப்பு, பொலன்னறுவை மற்றும் ஹம் பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிக மான ஓரளவு பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# ஹசரங்க இல்லாத இலங்கை ஓமானுடன் இன்று மோதல்

இலங்கை – இந்தியாவில் நடைபெற்று வரும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இன்று காலை பல்லேகலவில் நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை அணி, ஓமானை எதிர்கொள்ளவுள்ளது.

கண்டி, பல்லேகலவில் நடைபெறும் போட்டிகளில் இலங்கை அணி பலம் வாய்ந்த அணியாகவே கருதப்படும். 2023இல் ஓமானுக்கு எதிரான ஒரே ஒரு ஒருநாள் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றுள்ளது. இருப்பினும், நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியுள்ளமை இலங்கை அணிக்குப் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

ஹசரங்க இல்லாதமையால் மத்திய ஓவர்களில் விக்கெட் எடுக்கும் வேகத்தைக் குறைக்கலாம். அவருக்குப் பதிலாக வந்துள்ள துஷான் ஹேமந்த அதே போன்ற திறமை கொண்டவர் என்றாலும், சர்வதேச போட்டிகளில் அவர் இன்னும் தன்னை நிரூபிக்க வேண்டியுள்ளது. இப்போது சுழற்பந்து வீச்சின் பொறுப்பு மஹீஷ் தீக்ஷன மற்றும் துனித் வெல்லாலகே வசம் உள்ளது.

அதேவேளை, மத்திய வரிசைத் துடுப்பாட்டத்தில் இலங்கை சமீப காலமாக தடுமாறி வருகிறது. குறிப்பாக சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் சிக்கல் உள்ளது. ஹசரங்க இல்லாதது துடுப்பாட்டப் பலத்தையும் சற்றுக் குறைக்கிறது. இருப்பினும், பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ் மற்றும் அயர்லாந்துக்கு எதிராக சிறப்பாக விளையாடிய கமிந்து மெண்டிஸ் ஆகியோரை அணி பெரிதும் நம்பியுள்ளது.

அதேவேளை மறுமுனையில் இந்த ஆட்டம் ஓமான் அணிக்கு ஒரு 'வாழ்வா சாவா' போட்டி. சிம்பாப்வேயிடம் தோற்ற பிறகு, சூப்பர் 8 சுற்றுக்கு செல்ல இந்த வெற்றி அவர்களுக்கு அவசியம்.

பயிற்சிப் போட்டியில் இலங்கை 'ஏ' அணியை வீழ்த்தியமை ஓமானுக்கு நம்பிக்கையைத் தரும். ஆமிர் கலீம் மற்றும் விநாயக் சுக்லா போன்ற வீரர்கள் அதிரடியாக விளையாடக்கூடியவர்கள்.

ஆனால், இலங்கையின் வேகப் பந்து வீச்சாளர்களான துஷ்மந்த சமீர மற்றும் மதீஷ பத்திரன ஆகியோரின் வேகத்தை எதிர்கொள்வது ஓமானுக்கு பெரிய சவாலாக இருக்கும்.

அதேவேளை, ஹசரங்க இல்லாத இந்தச் சூழலை ஓமான் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், இந்தப் போட்டி ஒரு சுவாரஸ்யமான திருப்பத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

## ரி-20: நேற்றைய போட்டிகளின் முடிவுகள்

**தெ.ஆபிரிக்கா - ஆப்கான்**

187/6 187

போட்டி சமன். இரண்டாவது சுப்பர் ஓவரில் தெ.ஆ. வெற்றி

**ஆஸி. - அயர்லாந்து**

182/6 115

67 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வெற்றி

**மே.இ.தீ - இங்கிலாந்து**

196/6 166

30 ஓட்டங்களால் மே.இ.தீவுகள் வெற்றி

## ரி-20 உலகக் கிண்ணம்: அணிகளின் நிலை - 11.02.2026

**குழு - ஏ**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 0.932 |
| 2 | இந்தியா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 0.240 |
| 3 | நெதர்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.356 |
| 4 | நமீபியா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -1.033 |
| 5 | ஐ.அமெரிக்கா | 2 | 0 | 2 | - | - | - | -1.525 |

**குழு - பி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆஸ்திரேலியா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 3.350 |
| 2 | சிம்பாப்வே | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.702 |
| 3 | இலங்கை | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1.000 |
| 4 | அயர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.175 |
| 5 | ஓமன் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.702 |

**குழு - சி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மே.இ.தீவுகள் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.625 |
| 2 | ஸ்கொட்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.950 |
| 3 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.650 |
| 4 | நேபாளம் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -0.200 |
| 5 | இத்தாலி | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -3.650 |

**குழு - டி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 2 | 2 | 2 | 0 | 0 | 4 | 1.919 |
| 2 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.425 |
| 3 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -0.555 |
| 4 | ஐ.அ.இராச்சியம் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.763 |
| 5 | கனடா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.850 |

போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, ச-சமனிலை மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி

# முல்லை. கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தின் புதுப்பிக்கப்பட்ட சிறப்பு அங்காடி திறந்துவைப்பு


















**(பா.சதீசன்)**

கடந்த வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டிருந்த – முல்லைத்தீவு நகரப் பகுதியில் அமைந்துள்ள – கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'மெகா கோப் சிற்றி' புதுப்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அங்காடியை மீளப் புனர்நிர்மாணிக்கும் விடயம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் முன்மொழிவில் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் மேற்கொண்ட ஏற்பாட்டிலும் வழிகாட்டலிலும் 30 லட்சம் ரூபா பெறுமதியில் இந்த 'மெகா கோப் சிற்றி புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி நிதியில் இருந்து 1.45 மில்லியன் ரூபாவும், கூட்டுறவுத் திணைக்களத்தின் 5.5 லட்சம் ரூபா நிதி உதவியும், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து ஒரு மில்லியன் ரூபா கடனும் பெற்று இந்த அங்காடி புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்றைய திறப்பு விழா நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், செல்லத்தம்பி திலகநாதன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து சிறப்பித்தனர்.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 16 பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள 12 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தை கொண்ட ஆதனம் V. சத்தியானந்தன் பெண் மகேஸ்வரி என ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை பொன்னம்பலம் தியாகராஜா மகள் கமலநாயகி என்பவர் பிரசித்த நொத்தாரிசு இராசையா சிவ சுப்பிரமணியம் முகதாவில் 04.05.1966ம் திகதி 6009ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் நிலப்பரப்பு 2 விஸ்தீரணத்தை கொண்ட ஆதனத்தை வேலுப்பிள்ளை சத்தியநாதன் பெண் மகேஸ்வரிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் காட்டுக்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்தவர்களான சத்தியநாதன் கைம்பெண் மகேஸ்வரியும் சத்தியநாதனும், மோகன்ராஜ் சத்தியநாதனும், மனோராஜ் சத்தியநாதனும் சோபனா சத்தியநாதனும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு இராசையா சிவசுப்பிரமணியம் முகதாவில் 04.04.1977ம் திகதி 7956ம் இலக்க சீதன உறுதி மூலம் நிலப் பரப்பு 2 குளி 9 அளவில் சொரியலாய் 20/19 அளவு கொண்ட ஆதனத்தை அப்புத்துரை லோகநாதன் பெண் ஜயந்தி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சுண்டுக்குளி-12 காட்டுக்கந்தோர் ஒழுங்கை சத்தியநாதன் வினோதராஜ் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு இராசையா சிவசுப்பிரமணியம் முகதாவில் 05.02.1984ம் திகதி 9774ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் 20/1 நிலப்பரப்பு கொண்ட ஆதனத்தை அப்புத்துரை லோகநாதன் பெண் ஜயந்திக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல- 14, காட்டுக்கந்தோர் ஒழுங்கை சுண்டுக்குளி தற்போது லண்டனைச் சேர்ந்த அப்புத்துரை லோகநாதனும் பெண் ஜயந்தியும் பிரசித்த நொத்தாரிசு S. கிருஷ்ணகுமார் முகதாவில் 05.12.1988ம் திகதி 773ம் இலக்க சீதன உறுதி மூலம் 2 பரப்பு கொண்ட ஆதனத்தை சதானந்தா கிருபானந்தா பெண் சோபனா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் காட்டுக்கந்தோர் ஒழுங்கை இல-12, சுண்டுக்குளியைச் சேர்ந்த சதானந்தா கிருபானந்தா பெண் சோபனா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு M.தியாகராஜா முகதாவில் 13.10.2003ம் திகதி 6368ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 9 அளவு கொண்ட ஆதனத்தை பொன்னுத்துரை குகநேசன் என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் பிரதானவீதி 91ம் இலக்கத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை குகநேசனும் பெண் கலாநிதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V. தம்பி சிவலிங்கம் முகதாவில் 14.07.2004ம் திகதி 377ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 7.27 அளவு கொண்ட ஆதனத்தை முருகுப்பிள்ளை விஜயகுமாரியினதும் பெண் சசிகலாவினதும் சீவிய உரித்துக்கமைவாக பொன்னையா முருகுப்பிள்ளை பெண் காந்திமதி ஆகியோருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் சோரன்பற்று பளையச் சேர் ந்த பொன்னையா முருகப்பிள்ளையும் பெண் பெண் காந் திமதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V.தம்பி சிவலிங்கம் முகதாவில் 20.09.2004ம் திகதி 412ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 7.27 அளவு கொண்ட ஆதனத்தை பிரான்சிஸ் கிறிஸ்ரி நிர்மலாவின் சீவிய உரித்துக்கமைவாக பிரான்சிஸ் கிறிஸ்ரி அஞ்சலா என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல-25, புதிய பூங்கா வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீவகன் கிறிஸ்ரில்டா என்பவரால் பிரசித்த நொத்தாரிசு அன்ரனி அனுஜா முகதாவில் 19.07.2025ம் திகதி 356ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 7.27 அளவு கொண்ட ஆதனத்தைலியோனாட் கிளின்டன் ஜெயராஜ் ஏர்னஸ்ட் உம் பெண் நிர்மலா ஏர்னஸ்ட் ஜெயராஜ் உம் ஆகியோருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு, யாழ்ப்பாணம் மாநகரசபை, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, J/73 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள **"ஆராச்சியார் தாழ் வு வயலும் மறுபிரிவுகளும்"** நிலப்பரப்பு 2 குளி 09. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. லாசறஸ் அவர்கள் 01.02.1966ம் திகதி அளந்து தயாரித்த 3260 இலக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இது மீளவும் 05.06.2004ம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர்.இரத்தினராஜா அவர்கள் 944ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்ட பகுதியாகிய **நிலப்பரப் பு 2 குளி 7.27**. இந்த நிலப் பரப்பு இரண்டு குளி ஏழு தசம் இரண்டு ஏழுக்குரிய எல்லை

கிழக்கு – தியாகராசா மகள் கமலநாயகியின் ஆதனம்

வடக்கு – தியாகராசா மகள் கமலநாயகியின் ஆதனம்

மேற்கு – காட்டுக்கந்தோர் ஒழுங்கை

தெற்கு – குமாரசாமி சிவக்குமார் பெண் பாமாவின் ஆதனம்

இதடங்கலும் வீடும் கிணறும் வான்பயிர் செய் பயிர்களும் உட்பட இதற்குச் சேர் ந்தவைகளும்தற்போது இவ்வாதனத்தை லியோனாட் கிளின்டன் ஜெயராஜ் ஏர்னஸ்ட் உம் பெண் நிர்மலா ஏர்னஸ்ட் ஜெயராஜ் உம் என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப் பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது லியோனாட் கிளின்டன் ஜெயராஜ் ஏர்னஸ்ட் உம் பெண் நிர்மலா ஏர்னஸ்ட் ஜெயராஜ் உம் என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை.**

# சாவகச்சேரி தேங்காய்க் கடை வியாபாரிகளின் பிரச்சினையை நேரில் கஜேந்திரகுமார் ஆராய்வு





(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொதுச்சந்தையின் தேங்காய்க் கடை வியாபாரிகளுடைய பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுப் புதன்கிழமை நேரடியாக வருகைதந்து பார்வையிட்டமையுடன் வியாபாரிகளின் பிரச்சனைகள் தொடர்பாகக் கேட்டறிந்தும் கொண்டார்.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையின் செயற்பாடுகள் சிலவற்றைக் கண்டித்து பாதிக்கப்பட்ட தேங்காய் கடை வியாபாரிகள் கடையடைப்பு செய்து கவன வீர்ப்பு போராட்டம் முன்னெடுத்திருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் நிலைமைகளை நேரடியாக ஆராயும் பொருட்டு வருகை தந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினருடன் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசபையின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் வருகை தந்து நிலைமைகளை விளக்கியிருந்தனர்.

# திருக்கேதீஸ்வர சிவராத்திரி ஏற்பாடுகள் நேற்று முன்னாயத்தக் கலந்துரையாடல்!









(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் சிவசம்பு ராமகிருஷ்ணன் கலந்து கொண்டார். எதிர்வரும் மகா சிவராத்திரி விழாவிற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களை போன்று இம்முறையும் பல லட்சக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ள உள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், திணைக்கள தலைவர்கள், இராணுவத்தினர், பொலிஸ் உயர் அதிகாரிகள், அரச - தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# முனைவர் சிதம்பரநாதனுக்கு அலரிமாளிகையில் 'நாடகக்கீரத்தி' வாழ்நாள் சாதனையாளர் விருது

அரச நாடக விழா 2025இன் விருது வழங்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி மாலை கொழும்பு அலரி மாளிகையில் நடைபெற்றது.

நிகழ்வில் 2025 இற்கான நாடக கீர்த்தி விருது 'கலையே வாழ்வாகவும், வாழ்வே கலையாகவும் வாழும்' முனைவர் க.சிதம்பரநாதனுக்கு வாழ்நாளில் ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் 'நாடகக்கீரத்தி' என்னும் வாழ்நாள் சாதனையாளர் அரச உயர் விருதை அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி வழங்கி கௌரவித்தார்.

2025 ஆம் வருடத்தின் சிறந்த நெடும் நாடகத்திற்கு விருதை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில்ன்ன செனவி,நெடும் நாடகத்தில் பங்கேற்ற குழுவினருக்கு வழங்குகின்றமையையும் ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைவர் புரவலர் ஹாஷிம் உமர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட நாடகத்திற்கு விருது வழங்குகின்றமையையும் படங்களில் காணலாம்.











# 34 பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களுக்கு மன்னாரில் நேற்றுப் புதிய நியமனங்கள் வழங்கல்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமை ஆற்றிய 34 பேருக்கு நேற்றைய தினம் “சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்“ நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றி வந்த 34 பேர், கிராமிய அபிவிருத்தி, சமூகஒ பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு மாற்றப்பட்டு சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனக் கடிதங்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் அங்கு கூறியவை வருமாறு:-

நடுத்தர வர்க்கத்தில் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் மீது எமது அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

இவ்வாறான மக்களைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றக் கூடிய திட்டங்களை நாங்கள் வகுத்திருக்கிறோம். இனிவரும் காலங்களில் அதற்குரிய பலன்களை நீங்கள் அனுபவிப்பீர்கள். எனவே உங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

அதிலே ஏதேனும் இடர்பாடுகள் ஏற்பட்டால் நீங்கள் பிரதேச செயலாளர் அல்லது பிரஜா சக்தி தலைவர்கள் ஊடாக அதைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

எல்லாருக்குமே இது ஒரு புதிய பணி. எந்த ஒரு விடயத்தையும் தனியாக முடிவெடுக்கும் போதுதான் பிரச்சுனைகள் உருவாக்குகின்றன. எனவே நீங்கள் குழுவாகச் சேர்ந்து செயல்பட வேண்டும்.

கடந்த அரசாங்கங்களின் காலங்களிலே வழங்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு ஒரு தொகுதியாகத்தான் சென்று சேர்ந்திருக்கின்றன .

டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தினால் வெளியிடப் பட்டிருந்த நாடுகளுக்கு இடையேயான ஊழல் சுற்றறிக்கையில் 121 வது இடத்தில் இருந்த இலங்கை 107 ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளது.


இடங்கள் முன்னோக்கி வந்துள்ளது. 121 வது இடத்திலே இருப்பதென்றால் எவ்வகையான ஊழல்கள் கடந்த காலங்களில் நடைபெற்றன என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

எனவே ஊழல், மோசடிகளை எமது நாட்டில் இருந்து முற்றும் முழுமையாக துடைத்து எறிவதற்காகத்தான் இவ்வாறான திட்டங்களை எமது அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதில் எல்லாம் வெளிப்படைத் தன்மையாக இருக்கும். பாதிப்படைந்த மக்கள் மேலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இவ்வாறான திட்டங்கள் உதவும். எனவே நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டி எழுப்புவதற்காக செயல்பட வேண்டும்.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் உங்களுக்குரிய வரப்பிரசா-தங்களை அரசாங்கம் அவ்வப்போது வழங்கும். அத்துடன் உங்களுக்கான மேலதிக கொடுப்பனவுகளை விரைவாகக் கிடைப்பதற்குரிய ஒழுங்குகளை நிச்சயமாக அமைச்சரவை மட்டத்திலேயே கலந்துரையாடி பெற்றுத் தருவோம். - என்றார்.

இந்த நிகழ்வில், மன்னார் பிரதேச செயலாளர் ம.காந்தீபன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜே.ஜூட் மைக்கேல் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். 34 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு தங்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.



# சுமந்திரன், ஹக்கீம், சம்பிக்க தாக்கல் செய்த இ-விசா வழக்கு மார்ச் 25இல் விசாரணைக்கு

இலத்திரனியல் விசா (E-visa) வழங்கும் செயல்முறையை தனியார் நிறுவனங்களுக்கு மாற்றுவதற்குக் கடந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட உடன்படிக்கைகளின் சட்டப்பூர்வத்தன்மையை மீள்பரிசீலனைக்குட்படுத்த பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு தீர்மானித்துள்ளதாக சட்ட மா அதிபர் கடந்த திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்ட முதுமானி ரவூப் ஹக்கீம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் சர்ச்சைக்குரிய அந்த அமைச்சரவை முடிவை எதிர்த்து தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைகள் மனுக்கள் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதன்போதே, சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் விவேகா சிரிவர்தன இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் அடங்கிய அமர்வு முன் இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தபோது, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிரிவர்தன, இ-விசா வழங்கும் செயல்முறை தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் சட்டப்பூர்வத்தன்மையை மீள்பரிசீலனை செய்ய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் முடிவு செய்துள்ளார் என உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதுதொடர்பான கருத்தாடல்கள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன எனவும், அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து தெரிவிக்க ஒரு திகதியை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அப்போது, நீதிமன்றத்தின் முன் சமர்ப்பணத்தை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இந்த உடன்படிக்கைகளின் சட்டப்பூர்வத்தன்மையை இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மீள்பரிசீலனை செய்வதானாலும், அவற்றின் சட்டப்பூர்வத்தன்மை குறித்து நீதிமன்றம் மட்டுமே முடிவெடுக்க முடியும் என்று கூறினார்.

இந்த செயல்முறையின் மூலம் நாடு பெரும் பொருளாதார இழப்பைச் சந்தித்துள்ளதாகவும், இதன் மூலம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் என்று தான் எதிர்பார்க்கின்றார் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கூறினார்.

இந்த வழக்கில் மனுதாரர் ஒருவரான சட்டமுதுமானி ரவூப் ஹக்கீம், நீதிமன்றத்தின் முன் சமர்ப்பணத்தை முன்வைத்து, நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்த காலக்கட்டத்தில், அதாவது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் இ-விசாக்கள் வழங்கும் செயல்முறையை இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு மாற்றத் தொடங்கிய காலகட்டத்திலிருந்து, நாடு பாரிய இழப்பைச் சந்தித்ததாகக் கூறினார்.

இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், இதனை ஆராய்ந்து இது தொடர்புடைய உடன்படிக்கைகளை மீள்பரிசீலனை செய்வதற்காக கருத்தாடல்களை நடத்தி வருவதாகக் கூறிய போதிலும், இந்த இ-விசா வழங்கும் செயல்முறைக்கு புதிய டெண்டர்கள் வழங்கப்பட வேண்டுமானால், பகிரங்க விலைமனுக்கள் கோரப்பட்ட பின்னரே அதைச் செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

இவ்வாறு செய்யாவிட்டால், முன்னர் நடந்த அதே தவறு மீண்டும் நிகழும் வாய்ப்புள்ளது என்றும் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார். எனவே, இந்த மனுக்களை விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றத்தை அவர் கோரினார்.

இதன்போது, தொடர்புடைய உடன்படிக்கைகளின் சட்டப்பூர்வத்தன்மையை ஆராய்ந்து முடிவுகளை எடுக்க பிரதிவாதிகளுக்கு நேரம் வழங்குவது பொருத்தமானது என்று பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மனுதாரர்களின் சட்டத்தரணிகளிடம் சுட்டிக்காட்டினார்.

அதன்பின்னர், இந்த மனுக்கள் விசாரணை செய்யப்படுமென்று அவர் தெரிவித்தார். அதன்படி, இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆராய எதிர்வரும் மார்ச் 25ஆம் திகதி இது தொடர்புடைய மனுக்களை மீண்டும் விசாரணைக்கு அழைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை செயல் படுத்த தவறியதற்காக, நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு முன்னர் விளக்க மறியலும், பின்னர் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வழக்குத் தொடர்ந்தும் உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.



# இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் நேற்று மட்டு. மாவட்ட அரச அதிபருடன் கலந்தாய்வு

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட பாலங்களை இந்திய இராணுவத்துடன் இணைந்து நிர்மாணிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தில் டித்வா புயலினால் பல பாலங்கள் பகுதியளவிலும் முழுமையாகவும் சேதமடைந்துள்ள நிலையில் அது பற்றிய தெளிவூட்டல்கள் அதிகாரிகளினால் வழங்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட நிபுணர் குழுவினர் பாதிக்கப்பட்ட பாலங்களுக்கு நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

நேற்றைய சந்திப்பு நிகழ்வில் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் என்.கதிசன், நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ். கிரிசாந்தன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் கே.வில்வராசா, பொறியியலாளர் எஸ்.கலாதரன், மாவட்டச் செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான வி.நவதீதன், ரி.நிர்மலராஜ் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







# திருமலை கிளிவெட்டி, குமாரபுரம் படுகொலைகளின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ் பல்கலையில்

திருகோணமலை – கிளிவெட்டி, குமாரபுரம் படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தலில் உயிரிழுந்தவர்களின் படங்களுக்கு மலர் தூவி, சுடரேற்றி, அஞ்சலி செலுத்தப் பட்டது.

1996.02.11 அன்று இடம்பெற்ற குமாரபுரம் படுகொலையில், 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட 09 பிள்ளைகள், 09 பெண்கள் உட்பட 26 பேர் படுகொலை செய்யப்பட்டமையுடன் பலர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

















# அக்கரைவெளிப் பாலத்தைச் சீரமைக்க 65 மில்லியன் ரூபாவை ஒதுக்கிய பிமல்

## ரவிகரன் எம்.பியின் கோரிக்கைக்குக் கைமேல் பலன்











**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட எல்லைப்புறக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும், திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமமான தென்னமரவடியைச்சேர்ந்த விவசாயிகளும் தமது விவசாய நிலங்களுக்குச் செல்வதற்குப் பயன்படுத்தும் கோட்டைக்கேணி தொடக்கம், அக்கரைவெளி வரையிலான 16கிலோமீற்றர் வீதியும் அதனோடிணைந்த இரண்டு பாலங்களும் சீரின்றிக் காணப்படுகின்றமையால் விவசாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங் கொடுத்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அந்த வீதியையும், அதனோடிணைந்த பாலங்களையும் சீரமைத்துத் தருமாறு அமைச்சர் பொமல் ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் இந்த வீதியில் அமைந்துள்ள அக்கரைவெளி பாலத்தை நிர்மாணிப்பதற்கு 65 மில்லியன் ரூபாவைத் தாம் ஒதுக்கீடு செய்வார் எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமமான தென்னமரவடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தமது விவசாய நிலங்களுக்காகச் செல்லும் கோட்டைக்கேணி தொடக்கம் அக்கரைவெளி வரையான 16 கிலோமீற்றர் தூரமான வீதியையும் அதனோடிணைந்த இருபாலங்களையும் சீரமைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக அக்கரைவெளி, கன்னாட்டி, மாரியமுனை, கீழ்காட்டுவெளி, மேல்காட்டுவெளி, பாலங்காடு, கூமாவடிக்கண்டல், நாடயடிச்சமுறிப்பு, சிவந்தமுறிப்பு, சூரியனாறு, எரிஞ்சகாடு உள்ளிட்ட 2000ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்செய்கை நிலங்களுக்குச் செல்லும் வீதியே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 800இற்கும் மேற்பட்ட விவசாயக்குடும்பங்கள் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றன.

இவ்வாறு இந்த வீதியும் அதனோடு இணைந்த இரு பாலங்களும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமையால் இம்முறை பெரும்போகத்தில் அக்கரைவெளிப்பகுதியில் அறுவடைசெய்யப்பட்ட 5000வரையான நெல் மூடைகளை விவசாயிகள் வெளியே எடுத்துச் செல்ல முடியாமல் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த 02.02.2026அன்று அந்தொ பகுதிக்கு நேரடியாகச் சென்று விவசாயிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை நேரடியாகப் பார்வையிட்டிருந்தேன்.

எனவே அந்த வீதியையும் அதனோடிணைந்த இரு பாலங்களையும் சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

அந்த வீதியிலுள்ள ஏதாவது ஒரு பாலத்தை அமைப்பதற்குத் தம்மால் நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமென அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தமையுடன், எந்தப் பாலத்தை அமைப்பதென துறைசார்ந்தவர்கள் ஆலோசனை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அந்தவகையில் அக்கரைவெளிப் பாலத்தை முதலில் அமைப்பதே பொருத்தமானதாக இருக்குமென இதனனபோது பொறியியலாளர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய அக்கரைவெளிப் பாலத்தை அமைப்பதற்கு 65 மில்லியன் ரூபா நிதியைத் தாம் ஒதுக்கீடுசெய்வார் என் பிமல் ரத்நாயக்க இதன்போது தெரிவித்தார்.

அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது கோரிக்கைக்கமைவாக குறித்த 16கிலோமீற்றர் தூரமான வீதியில் 5கிலோமீற்றர் வீதியை முதற்கட்டமாக சீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும், விரைவில் அதற்குரிய சீரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்படுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நேற்று
# இந்த ஆண்டுக்கான புதிய சீருடை அறிமுகம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அலுவலக உத்தியோகத்தர்களுக்கான புதிய சீருடை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி ராகுல நாயகி சஜிந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை பொது மக்கள் தினங்களில் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மிக இலகுவாக அடையாளம் கண்டுகொள்ளும் விதமாக ஒவ்வொரு வருடமும் ஒரே நிறத்தில் சீருடை அணிந்திருப்பதை பல ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றனர். இந்த அடிப்படையில், 2026 ஆம் ஆண்டிற்கான புதிய சீருடை தற்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தினத்தில் அனைத்து அலுவலக உத்தியோகத்தர்களும் ஒரே நிறத்திலான இந்தச் சீருடையை அணிந்து வருகின்றமை பொதுமக்கள் தமது அலுவலக கடமைகளை இலகுவாக முன்னெடுப்பதற்கு பெரிதும் உதவிபுரியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் கணக்காளர் கே.றிஸ்வி யஹ்சர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராசா, பிரதேச செயலகத்தின் நிருவாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர், கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர், திணைக்களங்களின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், பிரிவு ரீதியாக கடமையாற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என சகல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.









# பருத்தித்துறை லூர்து மாதா திருத்தல திருவிழா திருப்பலியும் ஆராதனையும்

பருத்தித்துறை தும்பளை புனித லூர்து மாதா திருத்தல திருவிழாவின் திவ்விய நற்கருணை திருவிழா திருப்பலியும் ஆராதனையும் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

புனித லூர்து மாதா திருத்தல திருவிழா கடந்த 02 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில், யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி பி.ஜெ. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நேற்று மாலை 5.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆராதனை இடம்பெற்றது.

இரவு 7.00 மணியளவில் நற்கருணை திருவிழா இடம்பெற்றுள்ளது.









# உண்ணாவிரதம் இருக்கும் கவரவலைத் தோட்ட தொழிலாளர்களில் மூவர் வைத்தியசாலையில்

## மயக்கமுற்ற நிலையில் அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்டனர்

**(மஸ்கெலியா: செ.தி.பெருமாள்)**

கவரவலை தோட்டத்தில் தோட்ட முகாமையாளரினால் பணி இடை நிறுத்தம்செய்யபட்ட 8 தொழிலாளர்களும் தங்களுக்கு இடை நிறுத்தம் செய்ய பட்ட நாளில் இருந்து வேதனத்துடன் மீண்டும் பணிக்கு அமர்த்த வேண்டும் என கோரிக்கை முன் வைத்து கடந்த 5 ஆம் திகதி முதல் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அது நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதப் போராட்டமாக மாறியது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட எண்மரில் மூவர் மயக்க முற்ற நிலையில் அம்புலன்ஸ் மூலம் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொழிலாளர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பில் ஹட்டன் வலய பொலிஸ் தலைமை அதிகாரி காரியாலயத்தில் ஹட்டன் வலய பொலிஸ் அதிகாரி முன் நிலையில் பேச்சு நடத்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார, சம்பந்தப்பட்ட தோட்ட முகாமையாளர் ஆகியோரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட 8 தொழிலாளர்களும் கலந்து கொண்டு பேச்சு நடத்தினர். இருந்த போதிலும் முகாமையாளர் முறையாகப் பதில் சொல்ல முடியாத நிலையில் மீண்டும் அப்போராட்டம் உண்ணாவிரதப் போராட்டமாக மாறியது.

நேற்று முன்தினம் காலை முதல் உண்ணாவிரதம் இருந்த தொழிலாளி ஒருவர் மயக்கம் முற்ற நிலையில் நேற்றுக் காலை 10 மணியளவில் அம்புலனஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல பட்டு அங்கு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

பின்னர் மேலும் இருவர் 10.45 மணிக்கு மயக்கம் முற்ற நிலையில் அம்புலன்ஸ் மூலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சம்பள உயர்வு குறித்த உடன்படிக்கை தொழிலாளர்களை ஏமாற்றுகின்ற சதி

## ஜீவன் தொண்டமான் கடும் விமர்சனம்

இலங்கை அரசாங்கம் மற்றும் பெருந் தோட்ட நிறுவனங்களுக்கு இடையில் எட்டப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான உடன் படிக்கையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் கடுமையாக விமர் சித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தற்போதைய பொறி முறை, தொழிலாளர்களுக்கு எவ்வித சட்டப் பாதுகாப்பையும் வழங்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்திற்கும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் இடையில் கையெ முத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சட்டப்பூர்வமாக செல்லுபடியற்றது என ஒரு சரத்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல் இன்றி அரசாங்கம் பொதுப் பணத்தைச் செல விட்டு விளம்பரங்களை மட்டும் செய்வதில்



பயனேதும் இல்லை என்றும் இதனைத் தொழிலாளர் அமைச்சின் ஊடாக வர்த்தமானியில் வெளியிட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆரம்பத்தில் 2,138 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்குவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் தற்போது 1,750 ரூபா மொத்த சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டிருப்பது தொழிலாளர் களை ஏமாற்றும் செயலாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2026 ஜனவரி 30 அன்று எட்டப்பட்ட ஒப்பந்தத்தின்படி, அடிப்படைச் வேதனம் 1,350 ரூபாவிலிருந்து 1,550 ரூபாவாக உயர்த்தப்பட்டது.

இதனுடன் 200 ரூபா வரவு ஊக்கத் தொகையும் சேர்த்து மொத்தமாக 400 ரூபா அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இந்த அதிகரிப்பில் 200 ரூபாவை பெருந்தோட்ட நிறுவனங்களும், மிகுதி 200 ரூபாவை அரசாங்கமும் நிதி உதவியாக வழங்கும் எனக் குறிப்பிட்டார்.

கடந்த 20 வருடங்களாக நட்டத்தில் இயங்குவதாகக் கூறும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கூற்று அப்பட்டமான பொய் என ஜீவன் தொண்டமான் சாடி யுள்ளார்.

நட்டத்தில் இயங்கும் ஒரு தொழிலை எவரும் பல தசாப்தங்களாகத் தொடர மாட்டார்கள், இவை தொண்டு நிறுவனங் கள் அல்ல எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் இந்த சம்பள உயர்வை வரலாற்றில் மிகப்பெரிய அதிகரிப்பு என வர்ணித்தாலும், தொழிலாளர்களின் நீண்டகால உரிமைகளை அரசியலுக் காகப் பலிகடா ஆக்கக் கூடாது என ஜீவன் தொண்டமான் எச்சரித்துள்ளார்.



# மரக்கறி விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம்

விசேட பொருளாதார மத்திய நிலை யங்களின் நேற்றைய விலைப்பட்டிய லுக்கு அமைய, மரக்கறிகளின் விலை கள் ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டன.

அதன்படி, ஒரு கிலோகிராம் உரு ளைக்கிழங்கு வவுனியாவில் 370 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட நிலை யில், நுவரெலியாவில் 300 ரூபாவுக் கும், கெப்பட்டிபொலையில் 250 ரூபா முதல் 300 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

கரட் ஒரு கிலோகிராம் வவுனியாவில் 330 ரூபாவுக்கும், கெப்பட்டிபொலையில் 200 ரூபாவுக்கும், நுவரெலியாவில் 290 ரூபாவுக்கும் விற்பனை செய்யப் பட்டது.

பீட்ரூட் ஒரு கிலோகிராம் நுவரெலியா வில் 180 ரூபாவுக்கும், வவுனியாவில் 200 ரூபாவுக்கும், கெப்பட்டிபொலையில் 200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப் பட்டுள்ளது. கத்தரிக்காய் ஒரு கிலோ கிராம் வவு னியாவில் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், கெப்பட்டி பொலையில் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை கறிமிளகாய் நுவரெலி யாவில் 500 ரூபாவுக்கும் கெப்பெட்டி பொலையில் 550 ரூபாவுக்கும், வவுனி யாவில் 600 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

நுவரெலியாவில் கடந்த வாரம் அதிக கேள்வி நிலவிய குடை மிளகாய் வகைகளின் விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று சிவப்பு குடை மிளகாய் ஆயிரத்து 850 ரூபா வுக்கும், மஞ்சள் குடைமிளகாய் இரண் டாயிரத்து 100 ரூபாவுக்கும், பச்சை குடை மிளகாய் ஆயிரத்து 100 ரூபாவுக் கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

# அல்லைப்பிட்டி துப்பாக்கிச்சூடு: கைதான இருவருக்கும் பிணை!

## சிறுவனின் சாவு குறித்து உருக்கமான வாக்குமூலம் வட்டுக்கோட்டையில் இன்று இறுதிக்கிரியைகள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டிப் பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இருவரையும் பிணையில் விடுவிக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலா 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா இரண்டு ஆள் பிணைகளிலும் அவர்களை விடுவிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை அல்லைப்பிட்டிப் பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த "ஹயஸ்" ரக வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் வாகனத்தை ஓட்டிச் சென்ற 17 வயதுடைய சிறுவன் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக வாகனத்தில் பயணித்த மற்றுமொரு நபரும் சிறுவனின் சிறிய தந்தையும் கைது செய்யப்பட்டு, முன்னதாக எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று புதன்கிழமை, சந்தேகநபர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி தாக்கல் செய்த நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.




கைதானவர்கள் நீதிமன்றில் வழங்கிய வாக்குமூலத்தில் சம்பவத்தை விவரித்துள்ளனர்.

ஆரம்பத்தில் சிறுவனின் சிறிய தந்தையே வாகனத்தை ஓட்டியுள்ளார். எனினும், தீவுப் பகுதியில் வைத்து சிறுவன் விருப்பம் தெரிவித்ததால் அவரிடம் வாகனத்தை ஒப்படைத்ததாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸார் மறித்தபோது வாகனத்தை நிறுத்தாது சிறுவன் செலுத்தியுள்ளார். மண்டைதீவு காவலரணில் பொலிஸார் மறிக்கத் தயாராக இருந்ததைக் கண்டு வாகனத்தை மீண்டும் அல்லைப்பிட்டி நோக்கித் திருப்பியபோது, பின்னால் துரத்தி வந்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

வாகனத்தில் இருந்ததாகக் கூறப்படும் சாணகம், கயிறு, வாள் மற்றும் வாகனத்தில் விழுந்துள்ள ஏனைய துப்பாக்கிச் சூடுகள் குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் இவர்கள் சட்டவிரோத மாடு இறைச்சிக் கும்பலுடன் தொடர்புடையவர்கள் எனப் பல்வேறு செய்திகள் பரவி வந்தன. இருப்பினும், உயிரிழந்த சிறுவன் அல்லது கைதான இருவர் மீதும் இதற்கு முன்னர் குற்றச்சாட்டுக்கள் அல்லது குற்றப் பின்னணிகள் இருந்ததாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் எவ்விதத் தகவலையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சிறுவனின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெறவுள்ளன.







# புனிதநகர் தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை புனிதநகர் தமிழ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை முதல்வர் கனகசபை இளங்கோவன் தலைமையில் சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை வளாகத்தில் இருந்து மாணவர்களின் இசை வாத்திய அணி வகுப்புடன் அதிதிகள் வரவேற்கப்பட்டு மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பிரதம விருந்தினராக பங்கேற்று சிறப்பித்திருந்ததுடன், வெள்ளிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி கௌரவித்திருந்தார்.



# தற்போதைய அரசியல் சூழலுக்கு பலமான எதிரணி மிக அவசியம்

## ''யானை' - 'தொலைபேசி' இணைவு குறித்து ருவான் கருத்து

"ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவதன் மூலம் நாட்டில் வலுவானதொரு கூட்டு எதிரணியைக் கட்டியெழுப்ப முடியும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இரு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் தற்போது பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேச்சுகள் மிகவும் சாதகமான திசையை நோக்கி நகர்கின்றன. இதிலிருந்து சிறந்ததொரு முடிவை எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.

கட்சியின் அடிமட்ட நிலைவரம் குறித்துக் குறிப்பிட்ட அவர்,

"கிராம மட்டங்களில் பிளவுபட்டிருந்த கட்சி ஆதரவாளர்கள் தற்போது தாமாகவே ஒன்றிணைந்து வருகின்றனர். தலைவர்களும் அதேபோல் பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது. எனவே, அடுத்து வரும் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும்



கைகோர்ப்பதற்கான சூழல் கனிந்துள்ளது." – என்று சுட்டிக்காட்டினார்.

"நாம் இரு தரப்பும் இணைந்த பின்னர், ஏனைய ஒத்த கருத்துடைய தரப்புகளையும் உள்வாங்கி ஒரு பலமான பொது எதிரணியைக் கட்டியெழுப்ப முடியும். அதுவே தற்போதைய அரசியல் சூழலுக்கு அவசியமானது." – என்றும் அவர் வலியுறுத்தினார்.

நீண்டகாலமாகப் பிரிந்திருக்கும் இவ்விரு பிரதான கட்சிகளும் மீண்டும் இணைவது தொடர்பான பேச்சுகள் அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளன.

---

# மாகாண சபைத் தேர்தலை அரசு ஒருபோதும் நடத்தாது!

## இப்படி அடித்துக் கூறுகின்றார் ராஜித



தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு மாகாண சபைத் தேர்தலை ஒருபோதும் நடத்தாது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்தினால், அரசின் வாக்கு வங்கி மேலும் வீழ்ச்சியடையும். தோல்வி எனத் தெரிந்தே தேர்தலை எதிர்கொள்வதற்கு ஆளுங்கட்சி தயாராக இல்லை. இதன் காரணமாகவே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா என்பது பெரும் சந்தேகமாக உள்ளது." – என்றார்.

தேர்தல் தொடர்பில் அரசின் மெத்தனப் போக்கு குறித்துக் கருத்துத் தெரிவித்த ராஜித,

"தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தலை நடத்துவது குறித்து அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு அரசிடம் இருந்து இதுவரை எவ்விதப் பதிலும் இல்லை. தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதிலும் அரசு எவ்வித முனைப்பையும் காட்டவில்லை. இந்தச் செயல்பாடுகள் அனைத்தும் தேர்தலை நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றன." – என்றார்.

நீண்டகாலமாக ஆளுநர்களின் ஆட்சியின் கீழ் முடங்கிக் கிடக்கும் மாகாண சபைகளுக்குத் தேர்தலை நடத்தி, மக்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது. எனினும், முன்னாள் அமைச்சர் ராஜிதவின் இந்தக் குற்றச்சாட்டு அரசியல் வட்டாரத்தில் புதிய விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சமன் ஏக்கநாயக்கவுக்கு மீண்டும் விளக்கமறியல்

அரச நிதியை முறைகேடாகப் பயன் படுத்திய குற்றச்சாட்டின் கீழ் விளக்க மறியலில் லைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்க நாயக்கவை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக் குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க அமெரிக்காவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பும் வழியில், லண்டனில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நடைபெற்ற தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டமைக்காகப் பெருமளவி லான அரச நிதியைச் செலவிட்டதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பிலேயே இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளராகப் பதவி வகித்த சமன் ஏக்கநாயக்க, குறித்த தனிப்பட்ட பயணத்திற்கான நிதியை விடுவித்தபோது உரிய வெளிப்ப டைத்தன்மையுடன் செயற்படவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள் ளது.

இந்த விவகாரம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியிருப்பதைக் கருத்திற்கொண்டு, சந்தேகநபரைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் தீர்மானித் துள்ளது.





# சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட புனித லூர்து மாதா திருத்தல பெருவிழாவின் போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது செயற்பட்ட 08 உணவு கையாளும் நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புனித லூர்து மாத திருத்தல திருவிழா கடந்த 02 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திவ்ய நற்கருணை திருவிழா இடம்பெற்றது.

இதையடுத்து பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போலின் வழிகாட்டலின் கீழ் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் தலைமையிலான குழுவினர் இணைந்து ஆலய சுற்றுவட்டாரத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் செயற்பட்டுவந்த உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன் போது சுகாதார நடைமுறைகளான மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவினை கையாண்டமை, திண்மக்கழிவுகளை திறந்த வெளியில் அப்புறப்படுத்த காரணமாக அமைந்தமை, அனுமதிக்கப்பட்ட உணவுத்தர கொள்கலன்களை உணவுப்பொதியிடலுக்கு பயன்படுத்தாது பிளாஸ்ரிக் ரக கொள்கலன்களை பயன்படுத்தியமை, உட்பட பல்வேறு விதி மீறல்களுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து, மேற்படி குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஐஸ்கிறீம் வாகனங்கள், காரம் சுண்டல் வாகனங்கள், பானிப்பூரி விற்பனை நிலையங்கள் உட்பட 08 உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சபாநாயகரின் செயலாளருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முறைப்பாடு

சபாநாயகரின் பிரத்தியேக செய லாளருக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஊழல் முறைப்பாடு தொடர்பான விசாரணைக ளில், அவரது பிரத்தியேக செயலாளர் தலையீடு செய்து சாட்சிகளை மறைக்க முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் நேற்று முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் இடைநீக்கம் செய்யப்பட்ட பிரதிப் பொதுச் செயலாள ரால் சபாநாயகருக்கு எதிராக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள 08 பிரதான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளுக்குத் தேவையான ஆவணங்களைக் கோரி, சபாநாயகரின் பிரத்தியேக செயலாளர் நாடாளுமன்றப் பொதுச் செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது சாட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் மற்றும் விசாரணைகளைத் திசைதிருப்பும் சட்டவிரோதச் செயல் என அவர்கள் கடுமையாக விமர்சித்துள்ள னர்.

முறைப்பாட்டைச் சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா, கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவின் சுயாதீனமான விசாரணைகளில் எவரும் தலையிட முடி யாது என்றும், இத்தகைய சாட்சி மறைப் புச் செயல்களைத் தடுத்து முறையான விசாரணையை ஆணைக்குழு முன் னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத் தினார்.

மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பி னரான சமிந்த விஜேசிறி குறிப்பிடுகை யில், நிலக்கரி கொள்முதல் மற்றும் மின் சார விற்பனை உட்பட பல்வேறு மோச டிகளில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ள நிலையில், லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தனது நடுநிலைத் தன்மையை நிரூபிக்க இதுவே சரியான சந்தர்ப்பம் எனத் தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் இந்த முறைப்பாட்டை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மும்பையின் மேயரானார் பா.ஜ.கவின் ரிது தாவ்டே

மும்பை மாநகராட்சி மேயராகப் பா.ஜ.கவைச் சேர்ந்த ரிது தாவ்டே நேற்று பதவியேற்றுக் கொண்டார். துணை மேயராக சிவசேனாவின் சஞ்சய் சங்கர் காதி பதவியேற்றார்.

மகாராஷ்டிராவில் பிரிஹன்மும்பை மாநகராட்சித் தேர்தல் (பி.எம்.சி) ஜனவரி 15 ஆம் திகதி நடைபெற்றது. இதில் மொத்தம் உள்ள 227 இடங்களில், ஆளும் பா.ஜ.க. 89 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. அதன் கூட்டணிக் கட்சியான சிவசேனா (ஷிண்டே) 29 இடங்களில் வெற்றி பெற்றது.

மேயரை தேர்ந்தெடுக்க 114 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், பா.ஜ.க. கூட்டணி மொத்தம் 118 இடங்களில் வென்றது. இதன்மூலம் மேயர் பதவி இக்கூட்டணிக்கு உறுதியானது.

அதேநேரம் கடந்த 1997 முதல் பிரிஹன்மும்பை மாநகராட்சி தேர்தலில் தொடர்ந்து வெற்றி பெற்று வந்த சிவசேனா (உத்தவ்), இந்த தேர்தலில் 65 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. அதன் கூட்டணிக் கட்சியான மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா 6, தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார்) 1 இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றன. இதுபோல காங்கிரஸ் 24, ஏ.ஐ.எம்.ஐ.எம். 8, தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார்) 3, சமாஜ்வாதி 2 இடங்களில் வெற்றி பெற்றன.



மும்பை மாநகராட்சி மேயர் பதவி பொதுப்பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தேர்தலில் வெற்றி பெற்ற பா.ஜ.க. உறுப்பினர்கள் கூட்டம் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது. இதில், 132 ஆவது வார்டு உறுப்பினர் ரிது தாவ்டே மேயர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதை மூத்த தலைவர் அமித் சதம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். இந்த வார்டில் 3 ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ள ரிது தாவ்டே, பி.எம்.சியின் கல்விக் குழுத் தலைவராக பொறுப்பு வகித்துள்ளார். இதையடுத்து, ரிது தாவ்டே 7 ஆம் திக தி வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில் பிஎம்சியின் சிறப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றது. தேர்தல் அதிகாரியும் பி.எம்.சி. ஆணையருமான பூஷண் கக்ராணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேயர், துணை மேயர் ஆகிய இருவரும் போட்டியின்றி தேர்வாகினர் என அறிவிக்கப்பட்டது.

தேர்தல் நடைமுறைகள் முடிந்த பின்னர், பி.எம்.சி. தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 78 ஆவது மேயராக ரிது தாவ்டே நேற்று பதவியேற்றுக் கொண்டார். துணை மேயராக சஞ்சய் சங்கர் காதி பதவியேற்றுக் கொண்டார்.

# ஆட்சியில் பங்கு கேட்க மாட்டோம்: நயினார் நாகேந்திரன் திட்டவட்டம்

எடப்பாடி பழனிசாமியிடம் நாங்கள் ஆட்சியில் பங்கு கேட்க மாட்டோம் என பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் மார்ச் 1 இல் பிரதமர் மோடி பங்கேற்கும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இது தொடர்பாக மதுரையில் பா.ஜ.க. நிர்வாகிகளுடன் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கட்சி நிர்வாகிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.பின்னர் நயினார் நாகேந்திரன் செய் தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மதுரையில் மார்ச் 1 இல் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பது உறுதியாகியுள்ளது. எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பணிகள் முடிந்த பிறகு திறக்கப்படும்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் கௌரவ விரிவுரையாளர்களுக்கு நல்லது செய்வோம் என தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள். அதை நிறைவேற்றவில்லை. தூய்மை பணியாளர்களை போராட வைத்து தெருவில் நிறுத்தி விட்டு தற்போது சாப்பாடு போடுகிறார்கள். போராட்டம் நடத்துபவர்களிடம் முதல்வர் பேச்சுவார்த்தை நடத்தி, எப்படியாவது அடித்து பிடித்து ஆட்சியை பிடித்து கூட்டணி அமைச்சரவை



இல்லாமல் நானே முதல்வராகி நல்லது செய்கிறேன் எனச் சொல்லி சமாளித்து வருகிறார்.

தமிழகத்தில் ஆட்சியில் பங்கு கொடுப்பது ஒத்துவராது என முதல்வர் தெரிவித்துள்ளார். கூட்டணியை விட்டு வெளியேறுவதற்கு ஏதாவது காரணம் காங்கிரஸ் கட்சிக்கு தேவைப்படுகிறது. எதற்காக டில்லி சென்று கனிமொழி ராகுல் காந்தியை பார்க்க வேண்டும். எதற்காக கூட்டணி ஆட்சி ஒத்து வராது என முதல்வர் பேச வேண்டும். எதற்காக காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் 2026 தேர்தல் பற்றி பேச வேண்டும். எல்லாம் பார்க்கும்போது திமுக காங்கிரஸ் கூட்டணியில் குழப்பம் உள்ளது தெரிகிறது.

நாங்கள் தெளிவாக சொல்லி விட்டோம் தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி. அவரிடம் நாங்கள் ஆட்சியில் பங்கு எதுவும் கேட்க மாட்டோம். அது பற்றி நாங்கள் கேட்கவும் இல்லை, அவர்கள் தரமாட்டோம் என்றும் சொல்லவில்லை. தே.மு.தி.கவிடம் பா.ஜ.க. கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை.சசிகலா புதிய கட்சி தொடங்கினால் அ.தி.மு.க. ஓட்டுக்கள் பிரியுமா எனக் கேட்கிறார்கள். நாங்கள் யாரையும் கஷ்டப்பட்டு கூட்டணியில் சேர்க்க வில்லை. ஒவ்வொரு எம்.ஜி.ஆர். தொண்டனும் தி.மு.கவை எதிர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளான். தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ளது. பல மாற்றங்கள் வரும்." என்று தெரிவித்துள்ளார்.





# துருக்கி நாடாளுமன்றத்தில் பதற்றம் வாக்குவாதம் கைகலப்பாக மாறியது

துருக்கி நாடாளுமன்றத்தில் ஆளுங் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதம், கைகலப்பாக மாறியதில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றத்தின் போது சர்ச்சைக்குரிய ஒருவரை நீதி அமைச்சராக நியமித்தமையே இந்த மோதலுக்கு முக்கிய காரணமாகும் என சர்வதேச செய்திகள் குறிப்பிடுகின்றன.

துருக்கி ஜனாதிபதி ரையிப் எர்டோகன், இஸ்தான்புல் தலைமை அரச சட்டத்தரணியான அகின் குர்லெக்கை புதிய நீதி அமைச்சராக நியமித்திருந்தார்.

குர்லெக் நாடாளுமன்றத்தில் பதவியேற்பதைத் தடுப்பதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முற்பட்ட போது இரு தரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் சம்பவங்கள் காணொலிகளில் பதிவாகியுள்ளன.

புதிய நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அகின் குர்லெக், அரச சட்டத்தரணியாக இருந்தபோது பிரதான எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக அரசியல் உள்நோக்கத்துடன் பல வழக்குகளை முன்னெடுத்தவர் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

கடந்த ஆண்டு கைது செய்யப்பட்ட எர்டோகனின் முக்கிய அரசியல் எதிரியாகக் கருதப்படும் இஸ்தான்புல் மேயர் எக்ரெம் இமாமோக்லு உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கைது நடவடிக்கைகளுக்கு பின்னால் இவர் இருந்தார் என கூறப்படுகிறது.

நீதி அமைச்சருடன் சேர்த்து, எர்சுரம் மாகாண ஆளுநர் முஸ்தபா சிஃப்ட்சி புதிய உள்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி விலகிய அமைச்சர்கள் தாமாகவே முன்வந்து பதவியிலிருந்து விலகியதாக அரசாங்கம் தெரிவித்துள்ள போதிலும், இந்த அதிரடி மாற்றத்திற்கான உத்தியோகபூர்வ காரணங்கள் வெளியிடப்படவில்லை.

துருக்கியில் அரசமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியுடனான அமைதி முன்னெடுப்புகள் குறித்த விவாதங்கள் இடம்பெற்று வரும் சூழலில் இந்த அமைச்சரவை மாற்றம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிரேசிலில் வருமான வரிவிலக்கு: ஜனாதிபதி லூலா நடவடிக்கை

பிரேசிலில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்த தநாட்டு ஜனாதிபதி லூலா டா சில்வா வருமான வரிச் சலுகைகளை அறிவித்துள்ளார்.

நடுத்தர மற்றும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களைக் கவரும் வகையில் இந்த வரிச்சலுகை அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைய, 5000 ரியால் வரை மாத வருமானம் ஈட்டுபவர்களுக்கு வருமான வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கும் சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்.



இந்த சட்டத்தின் மூலம் சுமார் 1.5 கோடி பிரேசில் மக்கள் நேரடியாகப் பயனடைவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் லூலா மற்றும் எதிர்கட்சி என இரண்டு தரப்பும் இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தனர்.

இந்த வாக்குறுதியை தற்போது செயல்படுத்தியதன் மூலம் லூலா தனது அரசியல் பலத்தை நிரூபித்துள்ளார்.

சாதாரண மக்களுக்கு வரி விலக்கு அளிப்பதால் அரசாங்கத்திற்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்வதற்கு, அந்த நாட்டின் செல்வந்தர்கள் மீது புதிய வரிகளை விதிப்பதற்கும், பிரேசில் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக

# இன்றைய ராசி பலன்கள் - 12.02.2025

## மேஷம்

இன்று மனத் திடத்துடன் இருக்க வேண்டியது அவசியம். உங்கள் பணிகளை கையாளும்போது சில தடைகள் ஏற்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். நேர்மறையான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உறவில் மகிழ்ச்சி நிலவ நீங்கள் மனம் திறந்து பேச வேண்டும். அனுசரித்து செல்வது நல்லது.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினை காரணமாக அசௌகரியமாக உணர்வீர்கள். முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## ரிஷபம்

இன்றைய நாள் சீராக இருக்கும். நண்பர்களும் உடனிருப்பவர்களும் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

பணியிடத்தில் சில இனிமையான ஆச்சரியங்களை சந்திப்பீர்கள். எனவே உங்கள் பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாகத் தீர்க்கலாம். இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். அதை நல்ல முறையில் பயன்படுத்துவீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

உங்கள் கடின முயற்சிகளின் மூலம் வெற்றி காண்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் நேர்மை மற்றும் உறுதி காரணமாக உங்கள் பணிக்கு நல்ல மதிப்பு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவரும் பயனுள்ள ஆலோசனைகளை நடத்துவீர்கள்.

கடன்கள் மூலம் பண வரவு காணப்படும். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று மகிழ்ச்சியான ஆரோக்கியமான மன நிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்

## கடகம்

இன்று சுமாரான பலன்களே கிடைக்கும். உங்கள் செயல்களை மேற்கொள்ளும்போது சில சவால்களை சந்திக்க நேரும். இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை.

குடும்பதில் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் இருவருக்கும் இடையிலான உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

வீட்டுக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவுகளை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும். அவருக்கு வயிறு சம்பந்தமான உபாதை காணப்படும்.

## சிம்மம்

இன்று பயணம் அதிகமாக காணப்படும். பலன்கள் தாமதமாக கிடைக்கும். எனவே திட்டமிட்டு செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல் காணப்படும். உரையாடும்போது உங்கள் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை வேண்டும்.

நிதி நிலைமை திருப்திகரமாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். அதனைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. முறையாக உடற்பயிற்சி செய்வது நல்லது.

## கன்னி

இன்று வெற்றி எளிதாக கிடைக்கும். உங்களுடைய இனிமையான சுபாவம் பிறரிடம் உங்கள் மீதான நல்லெண்ணத்தை வளர்க்கும். நீங்கள் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் சவால்களை எளிதாகக் கையாள்வீர்கள். அனுசரித்து போகும் அணுகுமுறை உங்களை உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

காதல் ஜோடிகளிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவின் நல்லிணக்கம் மேம்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் மன உறுதி காரணமாக இன்று இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.

## துலாம்

இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். எனவே அவற்றை மேற்கொள்ளும் விதத்தில் உங்கள் செயல்களை திட்டமிதல் சிறந்தது. உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

வேலை விஷயமாக பயணம் செல்ல நேரும். ஆனால் அது திருப்தியை அளிக்காது. பயணத்தை தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

கட்டுப்பாடான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சிப் பூர்வமான விடயங்களைக் கவனமாகக் கலந்தாலோசிக்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே புத்துணர்ச்சி அளிக்கும் எந்த விடயத்திலாவது ஈடுபடுங்கள்.

## விருச்சிகம்

பயணத்தின்போது கவனமாக இருக்க வேண்டும். இசையைக் கேட்பது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியில் கவனம் குறைவாக காணப்படும். பணிகளை திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

தம்பதியரிடையே அன்பு குறைந்து காணப்படும். இது உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

பண வரவு செலவு இரண்டும் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

கவலைகளின் காரணமாக தூக்கமின்மை ஏற்படும். யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.02.2025




மற்றவர்களுடன் சிறிது எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். உங்களுக்கு பிரியமானவர்களுடன் பேசும் போது கவனம் தேவை. இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் சிறந்த பலனை அளிக்காது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படலாம்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். கவனமாக இல்லாவிடில் பண நஷ்டம் ஏற்படும்.

சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று பயணங்கள் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப் படும். ஆன்மீக ஈடுபாடு மிகுந்த ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் நல்ல செயற்றிறனுடன் செயல்படுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நல்ல புரிந்துணர்வு இருந்தால் தம்பதியரிடையே அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி மகிழ்ச்சியுடன் உணர்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். இன்று உங்கள் எதிர்கால நலன் கருதி முதலீடு செய்யலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள சிறந்த நாள். நீங்கள் எடுக்கும் சிறிய முயற்சிகள் கூட உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும். நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் நல்லாதரவு கிடைக்கும்.

புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். கிடைக்கும் நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்கையில் ஒருமுறை வரும் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை நேர்மையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று உங்களிடம் நிறைந்து காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் திறனை அடைவதற்கு குறைந்த வாய்ப்பு காணப்படும். அனைத்துச் செயல்களையும் திட்டமிட்டுச் செய்யவும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப் புள்ளதால் பணிகளைக் கவனமாக கையாளவும். நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அமைதியைப் பராமரிப்பது நல்லது.

பண வரவு காணப்பட்டாலும் இன்று செலவும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதிர்ஷ்டத்தை இன்று நம்ப வேண்டாம். உங்கள் கடின உழைப்பின் மூலம் பலன் கிடைக்கும்.

சரியான நேரத்தில் உணவு உண்ணுங்கள்.

# கற்பிட்டி ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய ஆசிரியர்களின் கௌரவிப்பும் பரிசளிப்பும் இன்று




(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் சேவையாற்றிய ஆசிரியர்கள் கௌரவிப்பும் சாதனை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் டபிள்யூ.பீ.சஹிலா தலைமையில் பாடசாலையில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வின் அதிதிகளாக முன்னாள் கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளரும் தற்போதைய புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் உதவித் திட்டப் பணிப்பாளருமான என்.எம்.ஆர்.தீப்தி பெர்னான்டோ, புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.எம்.காந்தி லதா மற்றும் கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.ஜவாத் ஆகியோருடன் கத்தோலிக்க மதத் தலைவரான வணக்கத்திற்குரிய அருட் தந்தை என்டன் நிரோஷன் குருசிங்கவும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்துடன் பெற்றோர்களின் மகளிர் அணியும் இணைந்து மேற்கொண்டுள்ளது.